
கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் இல்ல மணவிழாவை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார்.


கடலூர் மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம்,குள்ளஞ்சாவடி அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், நடைபெற்றது. கடலூர் மாவட்ட ஆட்சியர் அ.அருண் தம்புராஜ் தலைமை தாங்கினார். சுகாதாரப் பணிகள் துணை இயக்குனர் மருத்துவர் ஆர்.மீரா வரவற்புரையாற்றினார். மாவட்ட கல்வி குழு தலைவர் வி.சிவகுமார் முன்னிலை வகித்தார். பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். பின்னர் பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் மாணவ மாணவியர்களுக்கு கண்கண்ணாடிகளை வழங்கினார். எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், ஆர்.நாராயணசாமி, முத்து.பெருமாள், கே.பி.ஆர்.பாலமுருகன், சிவக்குமார், கோகிலா குமார், தமிழ்செல்வன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர். வடலூர் வட்டார மருத்துவ அலுவலர் மருத்துவர் அகிலா நன்றியுரையாற்றினார்.

### மணிப்பூரில் அமைதியை நிலைநாட்டத் தவறியது

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிர்வாகத் திறமையின்மையை காட்டுகிறது!

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றபின் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேட்டி!

புதுடெல்லி, ஜூன் 25 -

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட எடுத்த நடவடிக்கை பலனளிக்காதது ஒன்றிய பாஜக அரசின் நிர்வாகத்திறமையின்மையை காட்டுவதாக மாநிலங்களவை திமுக குழுத் தலைவர் திருச்சி சிவா தெரிவித்துள்ளார்.

மணிப்பூரில் கடந்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் பாஜக தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. பாஜகவைச் சேர்ந்த பிரேன் சிங் முதல்வராக இருந்து வருகிறார். மணிப்பூரில் 53 சதவீதம் இருக்கும் மைத்தி சமூகத்தினர், தங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு, பழங்குடியினர் பட்டியலில் இடம்பெற்றுள்ள குகி சமூக மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக இருதரப்பினர் இடையே கடந்த மே மாதம் 3ம் தேதி மோதல் ஏற்பட்டது. 50 நாட்களுக்கும் மேலாக நீடித்து வரும்



இந்த போராட்டத்தில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், மணிப்பூர் நிலவரம் குறித்து விவாதிக்க ஒன்றிய அரசு அழைப்பு விடுத்த அனைத்துக் கட்சி கூட்டம் உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் டெல்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்த கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய மாநிலங்களவை திமுக குழு தலைவர் திருச்சி சிவா, மணிப்பூருக்கு உடனடியாக அனைத்துக்கட்சிக்குழுவை அனுப்ப வேண்டும் என்று திமுக சார்பில் வலியுறுத்தியதாக தெரிவித்தார்.

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்டுவது குறித்து பிரதமர் மோடி இதுவரை கருத்து தெரிவிக்காதது கவலை அளிப்பதாகவும், அமைதியை நிலைநாட்ட ஒன்றிய, மாநில பாஜக அரசுகள் எடுத்த நடவடிக்கை பலனளிக்காதது பாஜக அரசின் நிர்வாகத்திறமை யின்மையை காட்டுவதாகவும் விமர்ச்சித்தார். மேலும், மணிப்பூருக்கு அனைத்துக் கட்சிக் குழுவை உடனே அனுப்ப வேண்டும் என தான் வலியுறுத்தியதாகவும் திருச்சி சிவா கூறினார்.

### சென்னை மேயர் ராதாகிருஷ்ணன்

# ஹாக்கி ஸ்டேடியத்தில் மேம்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

சென்னை, ஜூன் 25-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.06.2023) சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் நடைபெற்று வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை மேயர் ராதா கிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் வருகிற ஆகஸ்ட் 03 முதல் ஆகஸ்ட் 13 வரை ஹீரோ ஆசியன் சாம்பியன்ஸ் கோப்பை 2023 போட்டிகள் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான், மற்றும் கொரியா ஆகிய 6 நாடுகள் பங்கேற்கின்றன. சர்வதேச அளவிலான இப்போட்டியினை சிறப்பாக நடத்துகின்ற வகையில் மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் புரனமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த புனரமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ள திட்டமிடுவதற்கென ஹாக்கி இந்தியா அதிகாரிகள் குழு கடந்த ஏப்ரல் 19ம் தேதி ஆய்வு மேற்கொண்டது. அதனைத் தொடந்து மேற்கொள்ளபட வேண்டிய பணிகள் திட்டமிடப்பட்டு மைதானத்தை புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் கடந்த ஏப்ரல் 28ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

முதன்மை ஹாக்கி செயற்கை ஆடுதளம், வீரர்கள் பயற்சி செய்வதற்கான செயற்கை ஆடுதளம் மற்றும் இணைப்பு பணிகள், பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள், சிறப்பு விருந்தனர்கள் அமருவதற்கான பார்வையாளர் கூடம், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், மின்னொளி வசதிகள், நவீன கழிப்பிட வசதிகள் மற்றும் பிற சீரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.06.2023) மேயர் ராதா கிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகின்ற பணிகளை அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.



தி.மு.கழகம் ஒரு தென்னை
மரம்தான். அதன் தலைவர்கள்
தியாக உள்ளம்
கொண்டவர்கள் தியாகச்
சுடர்கள், கழகம் வளர்கிறபோது
தென்னை
மரத்திலிருந்து மட்டை
விழுவது போல் விழுந்து
தியாக வடுக்களை ஏற்படுத்தினார்கள்.

இன்று கழகம் வளர்ந்திருக்கிறது. இந்த
மரத்தின் உச்சியில் உள்ள
இன்ப வாழ்வென்னும் இளநீரைப்
பறிக்க ஏறும்
ஏழை மக்களுக்கு கழகத்தின் தியாகச்
செம்மல்கள் ஏற்படுத்திய
வடுக்கள் உதவியாக
இருக்கின்றன.

தியாகிகள் வளர்த்த தி.மு.கழகம் என்னும்
தென்னைமரத்தில் ஏறி ,
" நல்லாட்சி எனும் இளநீரை " பெற்றுக்
கொள்ளுங்கள் என்று
மக்களை அழைக்கிறேன்.

... ஏழை மக்களின்
ஏந்தல் **கலைஞர்.....**

### ந.கோபால் தலைமை! எஸ்.டி.கருணாநிதி - இரா.சதீஷ்குமார் வரவேற்புரை!

# திருப்பெரும்புதூர் தெற்கில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - பரிதி இளம் சுருதி - பவானி கண்ணன் சிறப்புரை!

திருப்பெரும்புதூர், ஜூன் 25-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (25.6.2023- ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு, திருப்பெரும்புதூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு தெற்கு ஒன்றியச் செயலாளர் ந. கோபால் தலைமை வகிக்கிறார். வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.டி. கருணாநிதி, பேரூர் செயலாளர் இரா.சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

ஏ.மோகனன், க.ரவிச்சந்திரன், ஜெகன் குமார், சுபரஞ்சினி கன்னியப்பன், ப. பரமசிவன், எஸ்.ஏ. சர்தார் பாஷா, பி.ஆர்.நேரு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் பரிதி இளம் சுருதி, பவானி கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் படப்பை ஆ. மனோகரன், அ.தமிழ்மாறன், த.துரைசாமி, மா. கணேஷ்பாபு, மாலதி போஸ்கோ, சாந்தி சதீஷ்குமார், எஸ்.கே. பாலா என்கிற பால்ராஜ், இந்திராணி சுப்பிரமணி, ஜா.செந்தில் தேவராஜ், கு.ப.முருகன், எஸ்.டி.ஜார்ஜ், பி.ரவி, இரா. பிரகாசம், நா.சத்யா, ஜெ. சிவபாதம், பி.கலைமேகன், தி.பிரபாகரன், நளினா சின்ன கண்ணு, மா. மணிவண்ணன், ச.வேலுமணி, எ.நாசர், இ.முனிகிருஷ்ணன், ஜெ.வேணுகோபால், எஸ்.பி.சி.குமார், மு.ஆறுமுகம், ஆர்.விஜயலட்சுமி, பி.குமார், ஆர். காத்தவராயன், ஜி.கே. கார்த்திகேயன், பி.ஆர்.சம்பத், என்.சாதிக் பாஷா, பாபு என்கிற புருஷோத்தமன், எஸ்.ரவி, பி.சரவணன், கே.ஸ்ரீதர் மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ப. இராமமூர்த்தி நன்றி கூறுகிறார்.

### வைகோ பொதுச் செயலாளராகத் தேர்வு!

# ம.தி.மு.க. புதிய நிர்வாகிகள் பட்டியல்!

## செய்தி தொடர்பாளராக மின்னல் முகமது அலி நியமனம்!

சென்னை, ஜூன். 25 -

ம.தி.மு.க.வின் 5வது அமைப்பு தேர்தல் சமீபத்தில் நடந்தது. இந்த தேர்தலில், ம.தி.மு.க. பொதுச் செயலாளராக வைகோ மீண்டும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், ம.தி.மு.க.வில் புதிய நிர்வாகிகள் பட்டியலை கட்சி தலைமை வெளியிட்டுள்ளது.

கொள்கை விளக்க அணி மாநில செயலாளராக வந்தியதேவன், இளைஞர் அணி மாநில செயலாளராக ஆசைத்தம்பி, மாணவர் அணி மாநில செயலாளராக சசிக்குமார், மகளிர்



அணி மாநில செயலாளராக மல்லிகா தயாளன், தொண்டர் அணி ஆலோசகராக பாஸ்கர சேதுபதி, செய்தி தொடர்பாளராக மின்னல் முகமது அலி அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, சட்டத் துறை மாநில செயலாளராக அமல்ராஜ், விவசாய அணி மாநில செயலாளராக ராஜேந்திரன், சிறுபான்மைப் பிரிவு மாநில செயலாளராக சிக்கந்தர், தீர்மானக்குழு மாநில செயலாளராக மணிவேந்தன், மருத்துவர் அணி மாநில செயலாளராக சுப்பாராஜ், வெளியீட்டு அணி மாநில செயலாளராக ஹேரிங்டன், மீனவர் அணி மாநில செயலாளராக பேட்ரிக், ஆபத்துதவிகள் அணி மாநில செயலாளராக சுமேஷ், இலக்கிய அணி மாநில செயலாளராக செல்வராஜ், கலைத்துறை மாநில செயலாளராக குடியரசு ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

### டி. கருணாநிதி ஏற்பாட்டில்

# 107வது வட்டத்தில் அறுசுவை உணவு!

சென்னை, ஜூன் 25-

அண்ணாநகர் தெற்கு பகுதி 107 வது வட்டத்தின் சார்பில் வட்டச் செயலாளர் டி. கருணாநிதி தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அய்யாவு காலனி விஜய் ஈஸ்வரி தெரு அமைந்தகரையில்,1100 பேருக்கு சமபந்தி விருந்து நிகழ்ச்சி இன்று (25.6.2023) மதியம் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக்குழு தலைவருமான நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவருமான ந.இராமலிங்கம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் கார்த்திக் மோகன்,கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.


முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் 103 இடங்களில் நேற்று (24.06.2023) கலைஞர் நூற்றாண்டு மெகா சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்றது. அதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கோடம்பாக்கம் மண்டலம், புலியூர் சென்னை மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நல்வாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு திட்ட இயக்குநர் மா.கோவிந்தராவ், துணை ஆணையாளர்கள் ஷேக் அப்துல் ரகுமான், விஷு மஹாஜன், நிலைக்குழு தலைவர் பொது சுகாதாரம் திருமதி. கோ. சாந்தகுமாரி, கோடம்பாக்கம் மண்டலகுழுத்தலைவர் எம் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் திருமதி மெட்டில்டா கோவிந்தராஜ், மருத்துவ கல்வி இயக்குநர் மரு. சாந்தி மலர், ஓமந்தூரார் மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. அரசி ஸ்ரீவட்சன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை- ஜப்பான் நேரடி விமான சேவை!

## ஒன்றிய அமைச்சருக்கு மீண்டும் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜூன் 25-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய எம்.சிந்தியாவிற்கு சென்னையிலிருந்து ஜப்பானுக்கு நேரடி விமான சேவை வழங்கிட ஆணையிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது.

தான் ஏற்கனவே தங்களுக்கு 25.4.2023 அன்று தேதியிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளவாறு கோவிட் பெருந்தொற்று பரவி இருந்த காலத்தில் ரத்து செய்யப்பட்ட சென்னை - ஜப்பான் நேரடி விமான சேவையை மீண்டும் துவங்கிட வேண்டும் என்று தங்களை மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொள்கின்றேன்.

விமான மூலம் பயணம் செய்வது தற்காலத்தில் விரைவான வசதியான பயணத்துக்கு மட்டுமின்றி பாதுகாப்பான பயணமாகவும் கருதப்படுகிறது. உலகில் உள்ள மிகப்பெரிய நகரங்கள் எல்லாம் விமான சேவைகளால் இணைக்கப்பட்டுள்ளன.



இதனால் ஒரு நகரத்தில் இருந்து, இன்னொரு நாட்டில் உள்ள நகரத்துக்கு விரைந்து செல்ல முடிகிறது.

சென்னை மாநகரம் இந்தியாவில் மூன்றாவது பெரிய நகரமாகவும் தென்னாட்டில் மிகப்பெரிய நகரமாகவும் உள்ளது வாரத்திற்கு 164 விமானங்கள் சென்னைக்கும் டோக்கியோவுக்கும் சென்று வந்து கொண்டிருந்தன. 10 விமான நிலைய சேவை நிறுவனங்கள் இவற்றை வழங்கி வந்தன. கோவிட் பெருந்தொற்று காலத்தில் விமானச் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன இவ்வாறு மீண்டும் விமான சேவைகள் துவங்கப்பட்டபின் சென்னை - டோக்கியோ நேரடி விமான சேவை மட்டும் துவங்கப்படவில்லை. சென்னை - டோக்கியோ நேரடி விமானத்தில் விமான பயணம் 9 மணி 15 நிமிடங்கள் ஆகும் ஆனால் தற்பொழுது சென்னையில் இருந்து டோக்கியோ நகரத்திற்கு இணைப்பு விமானம் மூலம் பயணம் செய்வதால் பயண நேரம் கூடுதலாகி வருகிறது.

இது குறித்து எங்களின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூட கடிதம் எழுதியுள்ளார். அதில் சென்னை - டோக்கியோ நேரடி விமான சேவையை மீண்டும் துவக்க வேண்டும் என்று கோரியுள்ளார். மேலும் அவர் ஜப்பான் நாட்டு தொழில் அதிபர்களும், தமிழகத்திலிருந்து புலம் பெயர்ந்து ஜப்பான் நாட்டில் வணிக மற்றும் தொழில் நிறுவனங்களை நடத்தி வரும் தமிழர்களும், சென்னை - டோக்கியோ நேரடி விமான சேவையை மீண்டும் துவங்க வேண்டும் என்று வற்புறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் நிசான், தோஷிபா, யமஹா, கோமட்சு, மிட்சுபிஷி மற்றும் ஹிட்டாச்சி போன்ற தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளின் கிளைகளைத் தமிழகத்தில் துவங்கியுள்ளன. ஜப்பான் -இந்தியா கூட்டு முதலீட்டை ஊக்கப்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ள 12 தொழில் நகரங்களில் மூன்று தமிழகத்தில் உள்ளது. மேலும் கடந்த 20 வருடங்களில் 600க்கும் மேற்பட்ட ஜப்பான் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் கிளைகளை படிப்படியாக துவங்கியுள்ளன. இந்தியாவிலேயே மிக அதிகமான அளவில் ஜப்பானியர்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்து வருவது தமிழ்நாட்டில் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது கோவிட் தொற்று குறைந்துள்ளதாலும் சென்னை - டோக்கியோ விமான சேவைக்கு அதிக தேவை இருப்பதால் மீண்டும் சென்னை - டோக்கியோ விமான சேவையை துவங்க வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி இக்கடிதத்தில் கூறியுள்ளார்.